# மாதிரி வினாத்தாள் 2019 – 2020 - III

## பத்தாம் வகுப்பு

## மொழிப்பாடம் : தமிழ்

நேரம் : 15 நிமிடம் + 3.00 மணி | மதிப்பெண்கள் : 100

### பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15 x 1 = 15

1. திருவள்ளுவர் அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். இத்தொடருக்குப் பொருத்தமான நிறுத்தக்குறியிட்ட தொடரைத் தேர்க.
   - அ. திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று 'அறுதியிட்டுக்' கூறுகிறார்.
   - ஆ. திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.
   - இ. திருவள்ளுவர், "அறிவுடையார், எல்லாம் உடையார்" என்று, அறுதியிட்டுக் கூறுகிறார்.
   - ஈ. 'திருவள்ளுவர்', 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.

| | | |
|---|---|---|
| அ. கொண்டல் | - | 1. மேற்கு |
| ஆ. கோடை | - | 2. தெற்கு |
| இ. வாடை | - | 3. கிழக்கு |
| ஈ. தென்றல் | - | 4. வடக்கு |

அ) 1, 2, 3, 4    ஆ) 3, 1, 4, 2    இ) 4, 3, 2, 1    ஈ) 3, 4, 1, 2

3. புதிருக்கான விடையை வரிசைப்படி தேர்ந்தெடுக்க

   தவழும்போது ஒரு பெயர்
   விழும்போது ஒரு பெயர்
   உருளும்போது ஒரு பெயர்
   திரண்டோடும் போது ஒரு பெயர் – அவை என்ன?

   அ. நீர், மழை, ஆறு, ஓடை    ஆ. மேகம், மழை, நீர், வெள்ளம்
   இ. மாரி, கார், நீர், புனல்    ஈ. மழை, புனல், மேகம், நீர்

4. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ......
   அ. முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்    ஆ. குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
   இ. குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்    ஈ. மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

5. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று .................... வேண்டினார்.

அ. கருணையன், எலிசபெத்துக்காக   ஆ. எலிசபெத், தமக்காக

இ. கருணையன், பூக்களுக்காக   ஈ. எலிசபெத், பூமிக்காக

6. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது –

அ. திருக்குறள்   ஆ. புறநானூறு

இ. கம்பராமாயணம்   ஈ. சிலப்பதிகாரம்

7. தென்னை மரங்கள் நிறைந்த பகுதியைக் குறிப்பிடும் வழாநிலை –

அ. தென்னந்தோட்டம்   ஆ. தென்னஞ்சோலை

இ. தென்னந்தோப்பு   ஈ. தென்னங்காடு

8. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

அ. தமிழ்   ஆ. அறிவியல்

இ. கல்வி   ஈ. இலக்கியம்

9. 'கானடை' என்னும் சொல்லைப் பிரித்தால் பொருந்தாத பொருளைக் குறிப்பிடுக.

அ. கான் அடை – காட்டைச் சேர்   ஆ. கால் உடை – காலால் உடைத்தல்

இ. கான் நடை – காட்டுக்கு நடத்தல்   ஈ. கால் நடை – காலால் நடத்தல்

10. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –

அ. பாடிய; கேட்டவர்   ஆ. பாடல்; பாடிய

இ. கேட்டவர்; பாடிய   ஈ. பாடல்; கேட்டவர்

11. தலைப்புக்கும் குறிப்புகளுக்கும் பொருத்தமான விடையைத் தேர்க.

தலைப்பு : செயற்கை நுண்ணறிவு

குறிப்புகள் :

1. கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.
2. திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது

அ. குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

ஆ. தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

இ. தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஈ. குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.



**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடைதருக.**

"அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்று எரி ஒள் இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே."

12. 'அசைஇ' – இச்சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ. வினைத்தொகை   ஆ. பண்புத்தொகை

இ. சொல்லிசை அளபெடை   ஈ. செய்யுளிசை அளபெடை

13. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' – இவ்வடியில் 'பாக்கம்' என்னும் சொல்லின் பொருள்

அ. சிற்றூர்   ஆ. பேரூர்

இ. கடற்கரை   ஈ. மூதூர்

14. பாடல் இடம்பெற்ற நூல் –

அ. சிலப்பதிகாரம்   ஆ. மலைபடுகடாம்

இ. முல்லைப்பாட்டு   ஈ. காசிக்காண்டம்

15. பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்கள்

அ. அன்று, கன்று, அலங்கு, சிலம்பு   ஆ. அன்று, அவண், அசைஇ, அல்கி

இ. சேந்த, செயலை, செப்பம், சிலம்பு   ஈ. அல்கி, எய்தி, போகி, எனினே

## பகுதி –II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு-1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4 x 2 = 8**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. எதற்காக எழுதுகிறேன்? என்று ஜெயகாந்தன் கூறிய காரணம் ஒன்றினைக் குறிப்பிடுக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள் அமைந்திருக்கும்.

ஆ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு இரா.இளங்குமரனார்.

18. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

19. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து இரண்டு குறிப்புகளை எழுதுக.

20. முல்லை நிலத்திலிருந்தும் மருதநிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?

21. மலைமேல் பாதுகாப்பாக நின்றுகொண்டு யானைப்போரைக் காணுதல் உவமையைக் கொண்ட திருக்குறளை எழுதுக.

## பிரிவு-2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **5 x 2 = 10**

22. **'பொறித்த'** - பகுபத உறுப்பிலக்கணம் காண்க.

23. தொடரில் விடுபட்ட வண்ணச்சொற்களை உங்கள் எண்ணங்களால் பொருத்தமுற நிரப்புக.

அ. வானம் ………… தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது.

ஆ. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் …………… புல்வெளிகளில் கதிரவனின் …………… வெயில் பரவிக் கிடக்கிறது.

இ. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் ……………

24. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது?

இதோ….. இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?

மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.

25. உணவு, விருந்து சார்ந்த பழமொழி ஒன்றினையும், விழிப்புணர்வுத் தொடர் ஒன்றினையும் எழுதுக.

26. "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

27. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

அ. இயற்கை – செயற்கை ஆ. தான் - தாம்

28. கலைச்சொல் தருக.

அ) **Belief** ஆ) **Renaissance**

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா**

மரபுத்தொடர்களைப் பொருளறிந்து தொடரில் அமைக்க.

அ) கண்ணும் கருத்தும் ஆ) மனக்கோட்டை



## பகுதி –III (மதிப்பெண்கள் : 18)

## பிரிவு–1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2 x 3 = 6**

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'

இதுபோல் இளம் பயிர் வகை மூன்றின் பெயர்களைத் தொடர்களில் அமைத்து எழுதுக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வாராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

அ. போர் அறம் என்பது எவற்றைக் குறிக்கிறது?

ஆ. ஆவூர் மூலங்கிழார் போர் அறம் குறித்துக் குறிப்பிடுவது யாது?

இ. போரில் யாருக்கெல்லாம் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன?

31. காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த உங்கள் கருத்துகள் மூன்றினை எழுதுக.

## பிரிவு–2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2 x 3 = 6**

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.

பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்

33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்?

**34. அடிபிறழாமல் எழுதுக -**

அ) 'சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்' எனத்தொடங்கி 'நன்னர் நன்மொழி கேட்டனம்' என முடியும் முல்லைப்பாட்டு.

**(அல்லது)**

ஆ) 'மாற்றம் எனது மானிடத் தத்துவம்' எனத்தொடங்கி 'தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்' என முடியும் காலக்கணிதப் பாடல்.

## பிரிவு-3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

35. "தொழுதகை யுண்ணும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து" இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

36. தன்மையணி என்பதனை விளக்கி, அதன் வகைகளைக் குறிப்பிடுக.

37. 'கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன.' காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.

## பகுதி –IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5 x 5 = 25

38. அ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

**(அல்லது)**


ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர்தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) நீங்கள் விரும்பி படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் கூறி, உங்கள் நண்பரையும் அந்நூலினைப் படிக்குமாறுப் பரிந்துரைத்து நண்பருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் குறுங்கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு எட்டு வரிகளில் கவினுற கவிதை ஒன்று எழுதுக.





41. கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தினைப் பூர்த்தி செய்க.

**நூலக உறுப்பினர் படிவம்**

**.......................... மாவட்ட நூலக ஆணைக்குழு**

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ..........................................

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் : உறுப்பினர் எண் :

1. பெயர் :
2. தந்தை பெயர் :
3. பிறந்த நாள் :
4. வயது :
5. படிப்பு :
6. தொலைபேசி / அலைபேசி எண் :
7. முகவரி :

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

நான் ...................................... நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. ........................ சந்தா தொகை ரூ. ........................ ஆக மொத்தம் ரூ. ........................ செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் :

தங்கள் உண்மையுள்ள,

திரு / திருமதி / செல்வி / செல்வன் ........................ அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணையாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை

(பதவி மற்றும் அலுவலகம்)

42. அ) தூய்மையான காற்றைப் பெறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளாக நீங்கள் கருதுவனவற்றை ஐந்து தொடர்களில் பட்டியலிடுக.

**(அல்லது)**

ஆ) ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைக் கவிதையில் கண்டு எழுதுக.

| | |
|---|---|
| யாழிசை | It's like new lute music |
| அறைக்குள் யாழிசை | Wondering at the lute music |
| ஏதென்று சென்று | Coming from the chamber |

எட்டிப் பார்த்தேன் | Entered I to look up to in still
பேத்தி. | My grand – daughter
நெட்டுருப் பண்ணினாள் | Learning by rote the verses –
நீதிநூல் திரட்டையே | of a didactic compilation
- பாரதிதாசன் | - Translated by Kavignar Desini

அ. Lute Music - ஆ. Grant – daughter - இ. To look up -
ஈ. Rote - உ. Didactic compilation -

<u>குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.</u>

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, 'பொய்யாச் செந்நா', "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான் துன்பத்தின் கதவுகளைத் திறப்பதும் அதுதான். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய்பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது. 'பிழையா நன்மொழி' என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது. இதற்கு மாறாகப் 'பொய் மொழிக் கொடுஞ்சொல்' என்று பொய்யைக் குறிப்பிடுகிறது. நிலம் புடைபெயர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாது என்பது பல இலக்கியங்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

i) வாய்மையை நற்றிணை எவ்வாறு குறிப்பிடுகின்றது?
ii) வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை இலக்கியங்கள் எவ்விதம் கூறுகின்றன?
iii) மனிதனைத் தாழ்த்துவது எது?
iv) நிலம் புடைபெயர்ந்தாலும் செய்யக்கூடாதது எது?
v) நாக்கு எதனால் அதிசயத் திறவுகோலாகிறது?

## பகுதி –V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** **3 x 8 = 24**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை விரிவாக எழுதுக.

**(அல்லது)**

ஆ) நிகழ்கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் – அவற்றின் ஒப்பனைகள் சிறப்பும் பழமையும் – இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் – அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன – இவை குறித்த உங்கள் கருத்துகளை நாளிதழ் ஒன்றிற்கான 'தலையங்கமாக' எழுதுக.



44. அ) "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் ஒரு விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்றினை எழுதுக.

**(அல்லது)**

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. அ) 'விசும்பின் துளியும் பசும்புல் தலையும்' என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக.

<u>குறிப்புகள் :</u> முன்னுரை – இயற்கையோடு இயைந்து வாழ்வோம் – வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் – மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் – முடிவுரை.

**(அல்லது)**

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதித் தலைப்பிடுக.

<u>குறிப்புகள் :</u> முன்னுரை – சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு – சாலை விதிகள் – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் – விபத்துகளைத் தவிர்ப்போம், விழிப்புணர்வு தருவோம் – முடிவுரை.